311

ഹോമിയോപ്പതി

ജനുവരി

198[illegible]

JL
LLm24,N47 HO.
N54. 9.1.
148810

311

# ஹோமியோபதி

நிர்வாக ஆசிரியர் : டாக்டர் V. R. மூர்த்தி

ஜனவரி 1954

ஏன் இதர வைத்தியர்களும் ஹோமியோபதியைத் தழுவுகிறார்கள்? .... 2
கால்கேரியா பாஸ்பாரிகம் .... 9
சபாஷ்! சபடில்லா .... 15
ஏழைகளின் தோழன் ஹோமியோபதி .... 18
நேயர்களின் கடிதங்கள் .... 21
செய்தி .... 23
ஹோமியோபதியின் வேதாந்தம் ... 26

## "டிஷ்யூடோன"

சரீரத்தின் வேலைகள் சரிவர நடைபெற தாது உப்புக்கள் மிகமிக அவசியம். இந்த தாது உப்புக்களில் ஏதாவது ஒன்று குறைந்தாலும் சரீரம் பலம் குன்றி வியாதிகள் தோன்ற ஆரம்பிக்கின்றன. எமது "டிஷ்யூடோன" வில் டாக்டர் ஷுஸ்லர் என்பவரின் தத்துவப்படி பன்னிரெண்டு வகைத் தாது உப்புக்களும் சரீரத்தில் உடனடியாகக் கலந்து பலம் கொடுக்கக்கூடிய முறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

50 மாத்திரைகள் கொண்ட பாட்டில் விலை ரூ. 2-8-0

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம் :: மதராஸ்

14810

ஹோமியோபதி

ஜனவரி 1954 No. 1

# *ஏன் இதர வைத்தியர்களும் ஹோமியோபதியைத் தழுவுகிறார்கள்?

(ஜே. எல்லிஸ் பார்க்கர், லண்டன்)

(பிரசுர உரிமை பெற்றது)

(தமிழ் ஆக்கியது—டாக்டர் R. N. சுவாமி)

(முன் தொடர்ச்சி)

கோர்ட்டுகளில் கூறப்படும் சாக்ஷியங்கள் நம்பத் தகுந்தவை அல்ல. நம்மிடையே பலர் சுற்றுப்புறங்களில் நடக்கும் விஷயங்களைக் கவனமாகக் கவனிப்பவர்கள் அல்ல. அவர்கள் கேள்விப்பட்டவைகளையும் கண்களால் பார்த்தவைகளையும்கூட பல சமயங்களில் தவறுதலாய்த் தெரிவிப்பார்கள். தவிர நமது ஞாபக சக்தியோ பலவிதமான சேஷ்டைகளைச் செய்யும். உதாரணமாக ஒரு மனிதன் ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி தீவிரமாகக் கனவு கண்டது, அவனுக்கு உண்மையில் நடந்தது போலவே தோன்றுவதும் உண்டு. ஆகவே சாட்சிகள் கூறுவதை நன்கு அலசி ஜாக்கிரதையுடன் கவனிக்கவேண்டும். இது போலவே வியாதியஸ்தர்கள் சொல்லுவதும், எல்லாம் நம்பத் தகுந்தவையாக இருக்கமுடியாது. தாங்கள் என்ன தெரிவிக்கவேண்டுமென்று நினைக்கிறார்களோ அதைத்தான் வியாதியஸ்தர்கள் சொல்லுகின்றார்கள். அனேக சந்தர்ப்பங்களில், வேண்டுமென்றே தவறான விஷயங்களைச் சொல்லுவதின் மூலமும், முக்கியமான விஷயங்களைச் சொல்லாமல் விடுவதின் மூலமும் வேண்டுமென்றே வைத்தியனைத் தவறான பாதையில் இழுக்கிறார்கள்.

* Translated by kind permission of **Mrs. Ellis Barker**. From chap. IV of "MIRACLES OF HEALING" by Ellis Barker, published by The Homoeopathic Publishing Company Ltd., London. Price Sh. 10/-. (Copyright)



311

அனேகர், அதிலும் ஸ்திரீகள், பதிபக்தியுள்ளவர்கள்; அவர்கள் தங்கள் புருஷர்களின் தவறுகளை மூடிவைக்கவே விரும்புவர். புருஷன் மனைவிக்கிடையேயும், பெற்றோர் குழந்தைகளுக்கிடையேயும் உள்ள உறவைத் தெரிந்துகொள்ளுதல் அவசியமாகும். அனேக சந்தர்ப்பங்களில் ஒரு குறிப்பிட்ட வியாதியில் சாதாரண வழிகளின் மூலம் பரிசோதித்துத் தெரிந்துகொள்வதனால் மாத்திரம் அவ்வியாதியின் மூல காரணத்தைத் தெரிந்துகொண்டுவிட முடியாது. ஆனால் மிகவும் முக்கியமான சில மனநிலைமைகளை அறிந்துகொள்வதின் மூலமே கண்டுகொள்ள முடியும். பொதுவாக நோக்குமிடத்து, சரீரத்தின் அவஸ்தைகளுக்கும் நிலைமைக்கும் தகுந்தபடி மனநிலைமை இருக்குமென்றாலும், மனம்தான் சரீரத்தை ஆளுகின்றது.

ஆண் பெண் உறவுகள் மிக முக்கியமானவை. ஒரு பெண் தன் புருஷனிடம் அன்பில்லாதவளாக இருப்பினும், அல்லது புருஷ சேர்க்கை அவளுக்குப் பிடிக்காமலிருந்தாலும், அவள் தனக்கு சௌகர்யமாக இருப்பதற்காக, புருஷ சேர்க்கை இருக்கமுடியாத ஒரு வியாதி தனக்கிருப்பதாகக் கூறலாம். இதில் சிலர் ஜனன உறுப்புகளில் வியாதியையும், மற்றும் சிலர் சேர்க்கை ஏற்படுங்காலையில் கடுமையான வலிப்புகளையும் தோற்றுவிக்கலாம்.

சில காலத்திற்கு முன், ஜனன உறுப்புகளில் கடுமையான கோளாறுகளுள்ள ஒரு ஸ்திரீ என்னிடம் வந்தாள். சர்வ சாதாரணமாக அவள் தன்னுடைய புருஷனுடன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகிறாளா என்று கேட்டேன். அவள் உற்சாகமில்லாமல் "ஆம், நாங்கள் சந்தோஷமாகவே இருக்கிறோம்" என்றாள். எனினும் நான் அவளை உற்று நோக்க, அவள் முகம் ஒருவாறு மாறுதல் அடைந்ததைக் கவனித்தேன். அவள் தன் புருஷனைக் காட்டிக்கொடுக்க விரும்பாமல் எதையோ மறைக்கின்றாள் என நினைத்து அவளை நான் உற்றுநோக்கிக்கொண்டு, "நீங்கள் உண்மையிலேயே சந்தோஷமாக இருக்கின்றீர்களா" என்றேன். நான் பார்க்கும் பார்வையைக்கண்டு, அவள் தன் பதிலைச் சற்று மாற்றிக்கொள்ளவேண்டுமென்று நினைத்தாள்

போதும். அவள் பதில் "எல்லா தம்பதிகளைப் போலவும் எங்களுக்குள் சிறிது அபிப்பிராய பேதம் இருக்கத்தான் செய்யும்." மறுபடியும் அவளையே பார்த்துக்கொண்டு கேட்டேன்: "உன் புருஷன் உன்னை அடிப்பதுண்டா?" அவள் முகம் உடனே சிவப்பேறிவிட்டது; மிகவும் மெல்லிய குரலில் "ஆம்" என்றாள்.

மற்றுமொரு சமயம் பாரிசவாயுவுடன் நடுக்கல்களும் இருந்த ஒரு ஸ்திரீ என்னிடம் வந்தாள். அவள்தான் வீட்டில் மிகவும் சந்தோஷமாக இருப்பதாகச் சொல்லி என்னை ஏமாற்றினாள். மறுபடியும் இரண்டு மூன்று மாதங்கள் கழித்து என்னை சந்தித்தாள். அவளுக்கு நான் கொடுத்த ஔஷதம் சரியானபடி வேலை செய்யவில்லை என்பதைக்கண்டேன். ஆகவே மறுபடியும் நான் அவளை அவளுக்கும் அவளுடைய புருஷனுக்கும் இடையே நிலவும் உறவு நிலைமையைப் பற்றி விசாரித்தேன், "நீ வீட்டில் உண்மையிலேயே சந்தோஷமாக இருக்கிறாயா? முழுவதும் சந்தோஷமாக முற்றிலும், சந்தோஷமாக" என்று அழுத்திக்கேட்டேன். அவள் என்னை நிமிர்ந்து பார்க்காமலேயே, தயக்கத்துடன், தான் வீட்டில் சந்தோஷமாக இருக்கவில்லை என்று கூறினாள். அவள் புருஷன் இரவு தூங்கும் வேளைகள் தவிர மற்ற சமயங்களில் வீட்டிற்கே வருவதில்லை. வீட்டுச் செலவுக்காக வாரம் ஒன்றுக்கு 15 ஷில்லிங்குகள்தான் கொடுத்துவந்தான். இது செலவுக்குப் போதாமல், அந்த ஸ்திரீ தன் வீட்டில் அதிதிகளை ஏற்றுக் கொண்டும், அதிகவேலை செய்தும் வீட்டுச் செலவை சரிக்கட்ட வேண்டிவந்தது. ஆனால் அதே சமயம் அவளுடைய புருஷன் பணத்தைத் தண்ணீர் போல செலவழித்துக்கொண்டு, கிளப்புகளிலும் கேளிக்கைகளிலும் இருந்துகொண்டிருந்தான்.

சுமார் 50 வயதுக்கு மேற்பட்ட ஸ்திரீ ஒருத்தி என்னிடம் வந்து தனக்குக் கீல்வாதமென்று தெரிவித்தாள். அவள் வீட்டின் சூழ்நிலை சந்தோஷகரமானதே. அவள் புருஷன் அவளுடன் கூட வந்திருந்தார். அவளுடைய வியாதி சொஸ்தம் ஆவதில் அதிக சிரத்தை காட்டினார். நான் எவ்வளவு சிகிச்சை



செய்தும் வியாதி சொஸ்தம் ஆகாதபடியால், அவள் கேசை நன்கு அலசிப்பார்க்க வேண்டி அவளை மறுபடியும் ஒரு தடவை வரும்படி கூறினேன். அவள் தெரிவித்தது: "நீங்கள் சொன்னபடியே பத்தியமிருந்தேன், மருந்துகளையும் சாப்பிட்டேன். ஆனால் வியாதி மாத்திரம் படியவில்லை." நான் கேட்டேன்: "நீங்கள் உங்களுடைய சரீர உபாதிகளைப்பற்றி எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்களா?" அவள் சொல்லுவதற்குள்ள எல்லா விஷயங்களையும் சொல்லி விட்டதாகவே தெரிவித்தாள். அப்பொழுது நான் கேட்டேன்: "தங்கள் நீர்ப்பையில் ஏதாவது கோளாறு இருக்கிறதா" அவள் சற்று குழப்பமடைந்து "ஆம் இருக்கிறது" என்றாள். "அது என்ன" என்று கேட்டபொழுது "என்னால் சிறுநீரைக் கட்டுப்படுத்த முடியாது, அரை மணிக்கு ஒரு தடவை நான் அவசரமாக சிறுநீர் விடும் இடத்திற்கு ஓட வேண்டும்" என்றாள். "பின் ஏன் இந்த விஷயத்தை முதன் முதலில் நான் கேட்டபோதே சொல்லவில்லை" என்று கேட்க, அந்த பாட்டி மிகவும் மெல்லிய குரலில் சொல்லுகிறாள்: "எனக்கு வெட்கமாயிருந்தது" என்று. நான் சொன்னேன்: "உங்களுடைய சிறுநீர்ப்பை இவ்வளவு பலவீனமாக இருப்பதால், நீங்கள் அதிகம் தண்ணீர் குடிப்பதில்லை என்று நினைக்கிறேன். ஆகவே முதலில் நான் தங்களுக்கு அறிவித்த பிரகாரம் ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் குடிக்கவேண்டுமென்று தெரிவித்திருந்தேனோ அதை நீங்கள் குடிக்கவில்லை. நீங்கள் போதிய அளவு தண்ணீர் குடிக்காததினால் உங்கள் இரத்தம் இருக்கவேண்டியதைவிட கெட்டியாக இருக்கின்றது. இதனால் மலபந்தம் ஏற்பட்டு அதன் விளைவாகக் கீல்வாதம் ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் எனக்குச் சரியான தகவல்கள் கொடுக்காமலும் என்னைத் தவறான பாதையில் இழுத்துச் சென்றுவிட்டீர்கள்" என்றேன்.

தாங்கள் மணம் செய்துகொள்வதற்கு முன், தங்களுக்கு ஏற்பட்ட ஒட்டுவாரொட்டி வியாதிகளைப்பற்றி ஒருவரும் தங்கள் மனைவிமாரிடம் தெரிவிப்பதில்லை. ஒரு பெண்ணுக்குத் தன் கணவனிடமிருந்து ஒரு நோய் வந்திருக்கலாமென்றோ அல்லது குழந்தைகளுக்குப் பெற்றோரிடமிருந்து வந்ததாகவோ

நினைக்க இடமுள்ள நிலைமைகளில், புருஷனையோ தகப்பனையோ தனியாக அழைத்துச் சென்று அவரைக் கேட்டு அவரைப் பற்றிய விஷயங்கள் அனைத்தையும் தெரிந்துகொள்ளவேண்டும். கீழ்க்கண்டவாறு அநேக சந்தர்ப்பங்களில் பதில் வரும்: "ஆம், எனக்குக்கல்யாணம் நடைபெறுவதற்குமுன், கொனோரியாவோ ஸிபிலிஸோ வந்திருந்தது. இதைப்பற்றி நான் என் மனைவியிடம் தெரிவித்தது இல்லை. தாங்களும் தயவு செய்து தெரிவிக்க வேண்டாம்." இம்மாதிரியான விஷயங்கள் நமக்கு மிகவும் உபயோககரமானவை. ஆனால் இம்மாதிரியான விஷயங்கள் (உண்மைக்குப் புறம்பாக) ஒப்புக்கொள்ளப்படாவிட்டால் அதனால் ஏற்படும் விளைவுகள் அன்னவரின் குடும்பத்திற்கே விபரீதப் பலனை ஏற்படுத்துவதாக இருக்கும்.

ஒரு நடிகை என்னிடம் வந்து தன் சரீரத்திற்கு இயல்பாயுள்ள சிகிச்சையளித்துக்கொள்ள விரும்பினாள். கட்டுக்கடங்காத வாழ்க்கை நடத்தியவள். அவளுடைய எண்ணொணாத தப்புக்களையும் துணிவுற்ற கெட்ட செயல்களையும் வெளிப்படையாக என்னிடம் கூறினாள். ஒன்றுமொளிக்காமல் எல்லாவற்றையும் கொஞ்சங்கூட கபடமின்றி ஒப்புக்கொள்வதாக என்னிடம் உரைத்தாள். நான்கு வருடங்கள் முற்றும் வெற்றிகரமாய் அவளுக்கு சிகிச்சையளித்தேன். நான்கு வருடங்கள் சிகிச்சை செய்த பிறகு தற்செயலாய் "சுமார் ஆறு ஏழு வருடங்களுக்குமுன் நான் பரங்கிமேக உபாதியை (syphilis) விளைவித்துக்கொண்டதை உங்களிடம் சொல்லவேயில்லை. நான் இதைத் தங்களிடம் தெரிவித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன்." என்று கூறினாள்.

ஒரு வியாபாரி என்னை ஆலோசனை கேட்டான். அவனுடைய வைத்தியரின் சிகிச்சையில் திருப்திப்படவில்லை. அல்லோபதி ரோகக் கண்டுபிடிப்பு புற்று நோய். அம்மனிதனின் நிறையில் 28 பவுண்டை இழந்திருந்தான். மஞ்சட் காமாலையால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தான் ஆழ்ந்து சோர்வுற்றுமிருந்தான். தற்செயலாய் நோக்குமளவில் எச்சரிக்கையான புற்று நோய் கேஸ் போன்று தோற்றமளித்தான். ஒருவர் நோயாளியை கண்களாலும், காதுகளாலும், பரிசத்தாலும் பரீக்ஷித்துப் பார்ப்பதுவுமல்லாமல் மோப்பத்தாலும்



பரீக்ஷிக்கவேண்டும். அம்மனிதனிடத்து குடிகாரனிடத்துத் தோன்றுவதான சுவாசம்போல் கோரமாய் துர்கந்தம் வீசியது. அதிகம் குடிப்பதுண்டோவென அவனை வினவினேன். "ஓஹோ, இல்லை, எப்பவாகிலும் ஒரு டம்ளர் சாதாரண பீர் பானம் குடிப்பேன்." என்று பதிலளித்தான். அந்த கோரமான துர்கந்தம் ஜீரணக்குறைவு, அன்னாசயத்துப் புற்றுநோய், வாயின் அழுகப்புண், நீடித்த மலச்சிக்கல் முதலியவைகளாலும் ஏற்பட ஏதுவாய் இருக்கலாம். மனிதர்கள் ரோகமுற்றிருக்கும் போது மனைவிகளை அல்லது புருடர்களை சிகிச்சை செய்து கொள்ள வரும்போது கூட அழைத்து வருவது இயல்பு. பேட்டி கண்டு முடிவுற்ற பிறகு புருஷன் மனைவி இருவரும் சென்றார்கள். வேண்டுமென்றே மறந்துவிட்டதுபோல் அவள் மனைவி குடையை விட்டுச் சென்றாள். அவள் புருஷன் மாடியிறங்கிச் சென்றபிறகு குடையை எடுத்துச்செல்லவென்று பறந்துகொண்டு மேலேறி வந்து "என் புருஷன் மீன் நீர் அருந்துவது போன்ற அசாத்திய குடிகாரன்" என்று என்னிடமுரைத்தாள். என்ன சாராயம் குடிக்கிறானென்று கேட்ட போது "எதை வேண்டுமானாலும் அதை, முக்கியமாய் சாராயங்களை! பெரிய அளவில்" என்றாள்.

வியாதியஸ்தர்கள் தங்களைப்பற்றிய உண்மைகளை டாக்டர்கள் வெளியாக்குவதை விரும்புவதில்லை, ஒரு இன்பமான உண்மைகளைச் சொல்ல விரும்புகிறார்கள். கடுமையான வலி தனக்கிருப்பதையும், புற்று நோய், பைத்தியம் அல்லது பட்சவாதத் தாக்குதல்கள் வருமோவென்ற பயத்தில் தாங்கள் இருந்து வரும் உண்மையை அவர்கள் சொல்லாது வைத்துக் கொள்கிறார்கள். மேலும் அவர்கள் குடும்பங்களில் பயித்திய நோய், பக்ஷவாதத் தாக்குதல் அல்லது புற்றுநோய் வகைகள் இருந்ததாகவுள்ள உண்மையை சொல்வதில்லை. "நான் மிக திடகாத்திரமாய் வாழ்ந்துவந்த குடும்பத்தில் பிறந்தவன். என் குடும்பத்தினர்கள் முதிர்ந்து கிழவர்களாய் மதித்தவர்கள்" என்று அடிக்கடி வியாதியஸ்தர்கள் கூறுகிறார்கள். ஒருவரின் வரலாற்றை விசாரிக்குமிடத்து, தகப்பனார் க்ஷயரோகத்தால் 42 வயதில் மறித்தார். தாயார் தனத்தில் புற்று நோயால் 56 வயதில் மறித்தாள், அக்குடும்பம் முற்றும் பலமற்றவர்களைக் கொண்டது என்பதைக் கண்டுகொள்ளலாம்.

மனிதர்கள் சரீரத்தைத் தாக்கும் முக்கியம் வாய்ந்தவைகளை அல்லாது, முக்கியத்துவம் இல்லாத அவர்கள் தோற்றத்தையும் சௌகர்யத்தையும் பாதிக்கும் விஷயங்களைப்பற்றியே புகார் செய்ய நோக்கமுறுகிறார்கள். ஒரு அழகி, உண்மையில் மிகக் கடுமையான அஜீரணம், மாதவிடாய் காலத்து கடுமை உபாதி, மிகுந்த பலவீனம், இதுபோன்றவைகளால் உபாதிப் பட்டுக்கொண்டிருந்தபோதிலும், முகத்திலுண்டான பிடிவாதமாய் நிற்கும் கரப்பான் எழுச்சி, அல்லது மூக்கில் சிவப்பு, அல்லது தாடையில் பரு எழுச்சி. அல்லது தாடி மீசை முளைக்க ஆரம்பமாதல், வியாதிக்கான வியர்வை, இவைகளை மாத்திரம் தெரிவிப்பாள். அனேகர் துர்கந்தமுள்ள பாத வியர்வையால் தாக்கப்பட்டிருந்தால் பயங்கரமாய் வெட்கப்படுகிறார்கள். 60 வயதான ஒரு சீமாட்டிக்கு கருப்பையில் ஒரு பெரிய தசை நார் கட்டி, கீல்வாத அழற்சி மற்றும் சில உபாதிகளுக்கு இரண்டு வருஷங்கள் சிகிச்சை செய்தேன். அவருடைய மணிக்கட்டு, விரல்களிலுமுள்ள கீல்வாத அழற்சி வீக்கங்கள் அளவிறந்து அனுகூலமுற்றபோது, பாதங்களைப் பற்றியவரை குணத்தில் திருப்திதானே என்று நான் அவளை விசாரித்தேன், பாதங்களைப் பற்றியவரை அவளுக்குக் கொஞ்சங்கூட திருப்திகரமாயில்லை. உண்மையில் அதைப்பற்றி குறிக்க வெட்கமடைந்தாள். அவைகளுங்கூட கீல்வாத அழர்ச்சியுற்றிருந்தன. ஆனால் நான் அவைகளைப் பார்க்க அவள் விரும்பவில்லை. கால் மேல்ஜோடையும் பூட்ஸையும் கழற்றும்படி நான் அவளை வற்புறுத்தினேன். தேகக்கூறுக்கு ஒத்த ஸிலிகாவைச் சுட்டிக்காட்டுவதான கோரமான வியாதியுற்ற பாதங்களையுடையவளாய் நான் முதல் தடவையாகக் கண்டேன். ஸிலிகா ஓர் அபூர்வ மருந்து இதன் உதவியால் உபாதியுற்ற பாதங்களின் வியர்வை 50 வருடங்களாய் இருந்து வந்தாலும் ஒருவர் குணமாக்க முடியும். தற்செயலாய் கருப்பையின் தசைநார் கட்டிகளுக்கும் இதர கெட்டியான கட்டிகளுக்கும் ஸிலிகா ஒரு நேர்த்தியான மருந்து. ஆரம்பத்திலிருந்தே அந்த ஸ்திரீயை ஸிலிகாவினால் சிகிச்சை செய்திருக்க வேண்டும் ஆனால் அவளுக்கு ஆபத்து விளைக்கும் ஒரு முக்கியமான உண்மை விஷயத்தை ரோகி என்னிடம் தெரிவிக்காமல் வைத்திருந்ததால் நான் அப்படி சிகிச்சை செய்யத் தவறினேன் தடையன்னியில், நான்தான் தவறியவன். முதலில் சிகிச்சைக்குத் துவங்குமுன் அந்த ஸ்திரீயை ஆடை முழுமையும் களைந்து விடும்படி நான் வற்புறுத்தியிருக்கவேண்டும். (தொடரும்)



Dr. Nash's Leaders in Therapeutics.

# கால்கேரியா பாஸ்பாரிகம்
# (CALCAREA PHOSPHORICUM)

[நாஷ் லீடர்ஸ் இன் தீராபுடிக்ஸ் என்னும் நூலிலிருந்து மொழிபெயர்ப்பு]
(பிரசுர உரிமை பெற்றது)

ஒற்றை நாடி (slim) தேகமும் இளைத்துக்கொண்டும் வரும் குழந்தைகளின் தலையில் வியர்வை தோன்றுதலுடன் தாமதமாய் மூடிக்கொள்ளும் அல்லது மறுபடியும் திறந்துகொள்ளும் உச்சிக்குழி.

சீதபேதி அல்லது குடல்களின் அழற்சி வலிகளுக்கு; மிகுந்த வாயுப் பொருமலுட்னும் படபடத்த சப்தத்துடனும் மலம் வெளியேறல்.

குளிர்காலத்துக்குப் பிறகு, பனியுருகும் காலத்தில், கடுமையாயிருக்கும் கீல்வாதப் பிடிப்புக்கள்.

* * * * *

*கால்கேரியா*-வைப்பற்றி படிக்கும்போது மேற்சொன்ன இந்தச் சேர்மான மருந்தையும் கவனிப்போம்.

இந்தத் தயாரிப்பில் சேர்ந்துள்ள *பாஸ்பரஸ்* மூலவஸ்து தேக வாகை மாற்றுவதாய்த் தெரிகிறது. ஏனெனில் தாமதமாய் எலும்பு வளருவதை குணமாக்கும் சக்தி இதற்கு இருந்தாலும் ***கால்கேரியா கார்பைப்*** போல் பருத்த தேகிகளில் அல்லாமல் மெலிந்த தேகிகளில் இது வேலை செய்கிறது. தலை உச்சிப்பொருத்து நெடு நாளைக்கு விலகியிருத்தல் அல்லது ஒரு தடவை மூடிக்கொண்டது மறுபடியும் திறந்து கொள்ளல், இவைகளுடன் இளைத்தும் இரத்தசோகையுமிருக்குமானல் இம்மருந்தை நாம் நினைக்கிறோம்.

இந்த நிலையையடைந்த குழந்தைகளுக்கு *சிலிகா*வையும் நினைக்கிறோம். ஆனால் ***கால்கேரியா பாஸில்*** தலையில் வியர்வை முக்கியமான குறியல்ல, ஆனால் *சிலிகா*வில் இது முக்கியமான குறியாகும். ***கால்கேரியா பாஸில்*** ஒரு அலாதியான ஆசையுண்டு. குழந்தை கோழிமுட்டையை சாப்பிட விரும்புவதற்குப் பதிலாய் * "பன்றி இறைச்சியைப் பொரித்துச் சாப்பிட" விரும்புவது விசித்திரமான குறியானாலும் உண்மையானதாகும். (***மெக்னீஷியா கார்ப்:*** குழந்தைகள் இறைச்சிக்குக் கெஞ்சுகிறது.)

வயிற்றுப் போக்கு முக்கியமான அம்சம். மலம் பச்சை நிறமாயும் "படபடத்த சப்தத்"துடனும் வெளியாகும்; வாயுவானது (மிகுந்த தேக்கத்தினால்) மலத்துடன் கிழித்துக்கொண்டு வெளியேறும்போது படபடவென்று சப்தம் செய்கிறது. இப்படியான நிலைமையில் பிழைக்குமென உறுதி

* இக்குறி மேல் நாடுகளுக்குப் பொருத்தம்

யில்லாது, தலையில் நீர் வீக்கம் ஏற்பட நேரிடும் தருவாயில் உள்ள கேஸ்களில் கூட சொஸ்தம் செய்திருக்கிறேன். அச்சிறு ரோகிகள் வதங்கி, வாடி, இளைத்து, இரத்த சோகை பிடித்திருந்தார்கள். ***இளைப்பு ரோகம்*** (Marasmus) (ஒருவித க்ஷயரோகம்.)

(கீல்வாதப் பிடிப்பில் ***கால்கேரியா பாஸ்*** ஒரு சிரேஷ்டமான மருந்து; இது குளிர் காலத்துக்குப்பிறகு இலையுதிர் காலத்தில் **உருகும்** ***பனியால்*** ஆகாயம் குளிர்ந்தும் ஈரமாயும் இருப்பதால் கடினமான **தாக்குதலை** ஏற்படுத்தும்)

எலும்பு முறிந்து பொருத்துக் கூடாவிட்டால் **அதற்கு** ***கால்கேரியா பாஸ்*** மிகச்சிரேஷ்டமான மருந்து (***விம்பைடம்மும்கூட***).

இரத்தசோகையுடன் கூடிய பள்ளி மாணவிகளுக்கு ஏற்படும் **தலைவலி**களுக்கு ***கால்கேரியா பாஸ்*** மிக உபயோகப்படுவதை **நான் கண்டிருக்**கிறேன். இந்த இடத்தில் இதற்கும் ***கேட்ரம் மூர்***-**க்கும் இரண்டிற்கும்** ஒன்றை சில வேளைகளில் பொருக்கியெடுக்க நேரிடும்.

உபாதிகளைப்பற்றி நினைத்தாலே உபாதிகள் **அதிகமாகத் தோன்றுதல்.** ***(ஆக்ஸாலிக் ஆஸிட், ஹெலோனியாஸ்.)***

## சிலிகா (ஸைலீஷியா)
## (SILICEA)

பலமற்ற வளர்ச்சியில்லாத குழந்தைகள்; **போஷாக்குக் குறைவால்** அல்லது, ஏற்று ஜீரணிப்பதில் குறையுள்ள தன்மையில்

வீக்கங்கள், சீழ் பிடிக்கும் எத்தனம், அல்லது ஆறுவதற்கு மறுதலித்தல் காண்பட்டுக் கொண்டுபோதல்.

குளிர்ச்சி, சுபாவ உயிருக்காதாரமான சூடற்று இருத்தல், தேகப் பயிற்சியால்கூட சூடுண்டாகாமை; தேகத்தைச் சுற்றிப் போர்த்திக்கொள்ளல், முக்கியமாய்த் தலையைச் சுற்றி மூடிக்கொள்வதால் சமனம்.

வியர்வையை உள்ளடக்குதலால், மிகுந்தும் துர்நாற்றமுள்ளதுமான வியர்வை, முக்கியமாய்ப் பாதங்களில்.

பலவீனம், நடுக்கமுற்ற, இலகுவில் சினமுண்டாகும், மனஞ்சலித்தவர்களுக்கு; உடன்படும் தன்மை, மனோபலத்தை இழந்து, எல்லாம் தளர்ந்து விட்ட தன்மை.



மலபந்தம்; மலம் மலவாயிலில் தோன்றி உடன் அடுத்து அடுத்து உள்ளிழுக்கப்படல், வெளித் தள்ளுதற்கான பலமற்றுப்போதல்.

தன்மைகள் : < குளிர்ச்சி அல்லது குளிர்காற்று, அசைதல், திறந்த வெளியில், அமாவாஸ்சையை அடுத்து : > உஷ்ண அறையில், தலையை மூடிக் கொள்வதால்; மந்திர ஆகர்ணசக்தி, மின்சார சக்தி இவைகளால்.

சொறி சிரங்கு பீடித்த களையுள்ள குழந்தைகளில் பருத்த தலைகளோடுள்ளவர்களுக்கு; தலைப்பொருத் தெலும்பு திறந்திருப்பது; தலையில் மிகுந்த வியர்வை, தலையைச் சூடாய் வைத்திருக்கத் தலையைச் சுற்றிக் கட்டிவைத்திருக்க வேண்டும்; பருத்த தொந்திகள்; வலுவற்ற கணுக்கால்கள், நடக்கக் கற்பதில் தாமதம்.

பாத வியர்வையை உள்ளடக்கியதால் ஏற்படும் வியாதிகள்; தலையும் முதுகும் காற்றடிக்கும்போது காற்றுப் படும்படி திறந்து வைத்தல்' அம்மை குத்திக்கொண்டதால் (துஜா); கல் தச்சர்களின் தூசி உபாதிகள்; அத்துடன் முற்றிலும் பலமிழத்தல்.

கிருகிருப்பு; குப்புற விழும்படி பிடரியிலிருந்து மேலேறும் முள்ளந்தண்டு நரம்புத் தலைவலி; அண்ணாந்து பார்த்தால் அதிகமாதல்.

ஆரோக்கியமற்ற சருமம்; ஒவ்வொரு சிறு காயமும் சீழ்க்கோர்த்தல்.

தேக உறுப்பினங்களிலிருந்து மீன் முள்கள், ஊசிகள், எலும்புச் சிலாம்புகள் முதலிய தேக சம்பந்தமில்லாத இதர வஸ்துக்களை வெளியேற்ற உதவுகிறது.

● ● ● ● ●

***சிலிகா*** தேக வாகையொட்டிய நமது மருந்துகளுள் மற்றொன்று, மேலும் ஹானிமென்னின் சட்டப்படி வீரியப்படுத்தப் பட்டாலொழிய இது உபயோகப்படுவதற்கு ஏதுவாகாது என்பவைகளில் ஒன்று. ***கால்கேரியா***வைப்போல ஆகாரம் ஜீரணித்து செரித்தலில் தப்பு ஏற்பட்ட, தலையில் வியர்வை உபாதையுள்ள (***ஸானிகுலா***) குழந்தைகளுக்கு முக்கியமாய் உபயோகமாயிருக்கும். ***கால்கேரியா***வைப்போல் கொழுத்த மந்தமான, சதை விழுந்தும், ஒரு பாகம் அதிகமாகப் போஷிக்கப்பட்டும் மற்றதில் குறைந்தும் காணும் ரோகிகளில்லாது, மிகக் கூச்சமுள்ள, பொதுவாய் போஷாக்கு குறைவாய், ஆனால் ஆகாரக் குறைவாலல்லாமல், ஆகாரம் சரியாய் ஜீரணித்துச் செரிக்காததால் ஏற்படும் வியாதிகளுக்கு ***சிலிகா*** உதவுகிறது. மணிக்குடல் வியாதிகளில் வயிறு பெரிதாயிருப்பதைத் தவிர ***சிலிகா*** குழந்தைகள் சாதாரணமாக இயற்கை அமைப்பு அளவுக்கு பெரிதாய் ஒரு பாகத்திலும் தோற்றமளிப்பதில்லை. எலும்பு குறுகுதல், கண்கள் குழிதல், நாதம் உண்டுதல், கிழத்தோற்றமளித்தல் ஆகியவை இதன் லக்ஷணங்கள்

பலத்திலோ ஆகிருதியிலோ விருத்தியடைவதில்லை, நடக்கக் கற்பது தாமதப்படுகிறது; சுருங்கச் சொல்லின், உள்ளபடி சீக்காய் படுக்கையில் விழாவிட்டாலும் வளர்ச்சி பற்றிய வரையில் முற்றும் எல்லாம் முடிவுக்கு வந்துவிட்டதாகக் காணப்படுகிறது. யாதொரு முன்னேற்றமும் ஏற்படுவதில்லை. இந்த நிலை தொடர்ந்து நின்றால் குடலில் மிக அதிகமாய் மலபந்தம் ஏற்பட்டு, இதுவுங்கூட ஒரு அலாதியான மலபந்தமாக இருக்கிறது, ரோகியின் பலவீனம் பொதுவாயிருப்பதுடன்கூட, அது ஆசனக் குழலின் வெளித் தள்ளும் சக்தியைத் தாக்கிவிட்டதுபோல அந்தச் சிறுவன் முக்கி முக்கி முயல, ***மலம் ஒரு பாகம் வெளியில் தோன்றித் தோன்றி உள்ளிழுக்கப்படுகிறது. (ஸானிகுலா, தூஜா).*** இல்லையேல், கோடையில் வெப்ப நாட்களில் அல்லது பல் முளைக்கும் நாட்களில், பிடிவாதமாய் தொடர்ந்து மலம் மிகத் தளர்ந்து போகிறது. மலம் நிறம் மாறிக் கொண்டிருக்கும். ஆனால் ***பல்ஸடில்லா*** குணம் செய்வதில்லை, அனேகமாய் ஒவ்வொரு விதமான நிறங்களிலும் மலக்கழிச்சல் உண்டாகிறது. ஆனால் ***சிலிகா*** கொடுக்கப்பட்டாலொழிய, வாந்தி யெடுத்தாலும் அல்லது ஆகாரம் உள்ளே தங்கினாலும் நாளுக்கு நாள் பலவீனப்பட்டு இளைத்துக் கொண்டே போய் சரீர போஷாக்குக் குறைவால் குழந்தை இறக்கிறது. இதைப்போன்ற அனேக கேஸ்களை இந்த மருந்தினால் காப்பாற்றி நல்ல ஆரோக்கியமுள்ள குழந்தைகளாய்ச் செய்திருக்கிறேன். நான் எப்பொழுதும் 30 வீரியம் அதற்கு மேலும் உபயோகிப்பதால் குறைந்த வீரியத்தைப்பற்றி நான் ஏதும் சொல்ல முடியாது. (***சிலிகா*** மலபந்தம் < மாதவிடாய்க்கு முன்பும் மாதவிடாய்க் காலத்தும் இருக்கும்.)

***சிலிகா*** வீக்கங்கண்டு சீழ் கோர்ப்பதில் முடியும் வியாதிகளுக்கு ஏற்பட்ட மருந்துகளில் முதல்ஸ்தானத்தை வகிக்கிறது. கோளங்களிலோ அல்லது எலும்புகளிலோ ஏற்படும் புண்களுக்கு இது சமமாய் நலம் அளிப்பதால் சீழ்கோர்த்தல் மிருதுவான பாகத்தில் தோன்றினாலும் அல்லது கடினமான பாகங்களில் தோன்றினாலும் இது வேலை செய்யும். முன்பே உண்டான சீழை சிக்கிரமே வெளிந்தள்ளும். ***ஹீபார்ஸல்ப்*** அல்லது ***கால்கேரியா ஸல்பைட்***களுக்குப்பின் சீழ் எல்லாம் வெளியேறத் தொடங்குகையில் புண்ணை ஆற்றுவதற்கு பிற்பட்ட கட்டத்தில்கூட இது உபயோகமாக வரும். மிகவும் ஆழமான மிருதுத் தசைகளில் சீழ் கோர்த்திருந்தாலும், தசை நார்களும் (tendons) பந்தனிகளும் (ligaments) பாதிக்கப்பட்டிருந்தாலும், இது சொஸ்தம் செய்ய சக்தி வாய்ந்தது. இப்படியுள்ள கேஸ்களிலெல்லாம் இந்த மருந்தைத் தேர்ந்தெடுப்பதற்குள்ள ரோகிகளின் தேகக்கூறு இம்மருந்தைச் சார்ந்ததாக இருக்கவேண்டியது முக்கியமானது. ***சிலிகா*** தேகிகள் பலவீனராயும், நல்ல சருமமும், மாப்போன்று வெளுத்த முகமும், தசை குறைந்தவர்களாயும் இருப்பார்கள்' மனமும் பயந்த சுபாவ குணங்களுங்கூட பொதுச் சித்திரிப்பான "பலவீனத்தில்" அடங்கியுள்ளது. நடுக்கம், சிடுசிடுப்பு, பலவீனம், மனஞ்சலித்தல், உடன்படும் தன்மை, மனோபலத்தை இழந்து "எல்லாம் தளர்ந்துவிட்ட" தன்மையுடையவன் (***பல்ஸடில்லா***). இப்படியுள்ள கேஸில் ***சிலிகா*** உத்கிருஷ்டமானது. நான் இந்த வார்த்தையை வெறுக்கிறேன், ஆனால் அல்லோபதி வைத்தியர்கள் சொல்வதுபோல "அது அவர்களை தேற்றுகிறது", அப்படித்தான் தோன்றுகிறது. ஏனென்றால் இந்த மருந்து வேலை செய்யும்போது ரோகியினுடைய உத்ஸாகம் எழுகிறது. நம்பிக்கை திரும்புகிறது, பலவீனமும் சோர்வும்போய் பலம் திரும்பிக் கிடைக்கிறது. நல்ல தேகாரோக்கியத்திற்கும் பலத்திற்கும் இடமளித்து விடுகிறது.



புண்கள் முற்கூறியபடி சதையிலோ, நுரையீரல்களிலோ, குடலிலோ அல்லது ஸ்தனங்களிலோ, அல்லது எங்கேயிருந்தாலும் பலன் எல்லாம் ஒன்றுதான்; மேலும் குறிப்பிட்ட உபாதி சொஸ்தமாவதுடன்கூட பொதுவாகவே சரீரமே வியாதியற்ற நிலைமையை அடைகிறது. இந்த பலவீனத்தின் நிலை பொதுவான நரம்பு மண்டலத்தைத் தாக்குவதால் அத்துடன் முள்ளந்தண்டு நரம்பைத் தாக்கி அதனால் பெருமூளை முள்ளந்தண்டு சம்பந்தத் தலைவலி ஏற்படுகிறது. அல்லது தலைவலி பிடரியிலிருந்து ஆரம்பமாகி முன்னோடி தலைமேல் வழிவந்து கண்களுக்கு வருவதற்கு ***சிலிகா*** மிக உபயோகமாயிருக்கிறது. கிருகிருப்புக்கூட பிடறியில் தொடங்கி மேலேறி தலைக்கு வருகிறது. < அண்ணாந்து பார்த்தல் (***பல்ஸடில்லா***).

நரம்புகளின் சக்திக் குறைவால் சரீரம் வெளியிலிருந்து சோர்வுபடுத்தும் சக்திகளை எதிர்த்து நிற்க முடியவில்லை என்று தோன்றுகிறது. அவன் குளிர்ச்சி உணர்ச்சியில் இருக்கிறான், அல்லது ஹெரிங் எழுதுவதுபோல் "தேகப்பயிற்சி செய்தாலுங்கூட உயிர் வாழுவதற்கு அவசியமான உஷ்ணநிலை இல்லாதிருக்கிறது" குளிர்ந்த காற்று அவனுக்கு சகிக்க முடிவதில்லை, எளிதில் நீர்கோவை, முக்கியமாய்த் தலை அல்லது காலைப் போர்த்திக் கொள்ளாவிட்டால் ஏற்படுகிறது. ஆனால் "தலையைச் சுற்றி ஏதாவது கட்டிக் கொண்டால்" (***மெக்னீஷ்யா மூர்.***) அல்லது வேண்டிய உஷ்ணத்தை செயற்கை சாதனத்தால் கொடுத்தால் குணமடைகிறான்.

அமாவாசை வரும்போது சிலிகா குழந்தைக்கு காக்கை வலிப்பு இசிவு மிகக்கடுமையாயிருப்பதை அனேகந்தடவைகளில் நான் கண்டிருக்கிறேன். ***சிலிகா*** 200 வீரியத்தில் சில வேளைகள் கொடுத்து அவர்கள் குணமடைந்தார்கள்.

***சிலிகா*** தேகிகள் பாதங்கள் நாற்றமுள்ள வியர்வையால் பாதிக்கப்பட்டு (***ஸானிகுலா, ஸோரினம், கிராபைடிஸ்***) காலை தண்ணீரில் நனைப்பதால் அந்த வியர்வை உள்ளடக்கப்படுகிறது. அப்படியுள்ள உள்ளுக்குத் தள்ளப்படும் உபாதியை நீர்க்கவேண்டும், வியர்வையை திரும்ப வெளிக்குத் தள்ளி நல்ல உகந்த மருந்தால் போக்க வேண்டும்; இல்லாவிட்டால் வலிப்பு அல்லது முள்ளந்தண்டு வியாதிகள், நடப்பதால் கோளாறுகள், முதலிய அபாயகரமான வியாதிகள் தோன்ற ஏதுவாகும். அப்படியுள்ள வியர்வையை வெளிக்கொண்டு வருவதிலும் குணமாக்குவதிலும் அந்த வியர்வையை உண்டாக்கும்

மூல்காரணத்தைச் சரிசெய்து குணமாக்குவதில் *சிலிகா* நிகரற்ற மருந்து. *(பாரிடாகார்ப், கிராபைடிஸ், ஸோரினம், ஸானிகுலா.)*

*சிலிகா* ரோகி தனக்கு ஆகர்ஷணசக்தியை உபயோகிக்க விரும்புவார் அதனால் குணமாகவும் செய்வார் *(பாஸ்பரஸ்.)*

*ஸெபியா, லாச்சஸிஸ் லைகொபோடியம்* மற்றுமுள்ளவைகளுடன் இந்த மருந்தும் ஒன்று. இவைகளைப்பற்றி அல்லோபதி வைத்தியர்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஏனென்றால் இவைகளின் நல்ல குணங்கள் வீரியத்தில் 12-க்கு மேல்பட்டதில்தான் கிடைக்கின்றன.

*சிலிகா பல்ஸடில்லாவுக்கு* பதிலாய் நாள்பட்ட *பல்ஸடில்லா* உபயோக கேஸ்களில் உதவும்.

## புத்தகங்கள் வரவு

**ஹோமியோபதி மெட்டீரியா மெடிகா**
ஆசிரியர்: டாக்டர் வி. என். சுந்தரம்
கிடைக்குமிடம்: மோஹன் நிர்மலா ஹோமியோ பப்ளிஷிங் ஹவுஸ்
19, மதுரை குப்பையர் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

சுமார் எண்பது பக்கங்களில் மிக முக்கியமான ஹோமியோபதி ஔஷதங்களைப் பற்றிய விபரங்கள் கொண்ட நூல் இது. ஆரம்பகால ஹோமியோபதியர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், எளிய தமிழில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தமிழில் சிறு சிறு ஹோமியோபதி நூல்கள் வெளியிட வேண்டும் என்னும் அவாக்கொண்டுள்ள இந்நூலாசிரியரின் நோக்கத்தை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

நல்ல காகிதத்தில் கொட்டை எழுத்துக்களில் தெளிவாக அச்சிடப்பட்டுள்ள இந்நூலின் கிரயம் ரூ. 2—4—0

இதே ஆசிரியரால் எழுதப்பட்ட "கர்ப்பத்தடை" (ஹோமியோபதியில்) என்ற சிறு புத்தகமும் கிடைக்கப்பெற்றோம். கர்ப்பத்தடைக்கு ஹோமியோபதி முறைப்படி வீர்யப்படுத்தப்பட்ட 'நேட்ரம் மூர், ஸெபியா' முதலிய ஔஷதங்கள் பிரயோசனப்படும் எனக்கூறப்பட்டுள்ளது. பரீக்ஷித்துப் பார்க்க வேண்டியதுதான்! பக்கங்கள் 14. விலை அணா ஆறு.

K. V. S.



## சபாஷ்! சபடில்லா

S. திருஞானம், ஞானவல்லி ஹோமியோ வைத்தியசாலை, உடையார்குடி

இந்த தலையங்கத்தைக்கண்டவுடன் உங்களுக்கு ஆச்சரியம் ஏற்படலாம். ஆனால் நீங்கள் இம்மருந்தை கையாண்டிருந்தால் அதன் மகிமை உங்களுக்கு உண்மையில் ஆச்சரியத்தையே உண்டு பண்ணும் என்று நான் திண்ணமாய் சொல்லுவேன். இதில் என் அனுபவத்தைக் குறிப்பிடுகிறேன்.

இரவு சுமார் 10-மணிக்கு என் வீட்டின் கதவை தட்டினர். போய் பார்த்ததில், தன் மனைவி இறக்குந்தருவாயில் இருப்பதாகவும், உடனே புறப்பட்டு வரும்படியாகவும் கூறினர். நானும் என் மருந்து பெட்டியுடன் புறப்பட்டேன். வழியில் நோயாளியின் நிலைமையை விசாரித்தேன். தன் மனைவிக்கு இடைவிடாத தும்மல் அடிக்கடி ஏற்படுகிறதாயும், சில சமயங்களில் மூர்ச்சித்து விடுவதாகவும் சொன்னர். இம்மாதிரியான நோய் சுமார் 3 ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்டு, சுற்று வட்டாரங்களில் குணம் கிடைக்காமல், சென்னைக்குப்போய் சுமார் 3000/- ரூபாய் செலவில் குணம் அடைந்ததாகக் கூறினர். நோயாளியை கவனித்தேன். பெண், வயது சுமார் 27. மூர்ச்சையடைந்து படுத்திருந்தாள். கைகால்கள் மடக்க முடியாதபடி விறைப்பாக இருந்தன. முகரும் உப்பை காண்பித்து மூர்ச்சை தெளிந்தவுடன் தும்ம ஆரம்பித்து சுமார் 15 நிமிஷம் இடைவிடாமல் தும்மி அம்மாடி என்ற சொல்லுடன் தும்மல் நின்றது. தும்மும்பொழுது முன்பக்கம் குனிந்து கொண்டு கைக்குட்டையால் தன் மூக்கை அடிக்கடி மூடிக்கொள்கிறாள். விசாரித்ததில் தனக்கு ஜலதோஷம் பிடித்ததாயும், மறுநாள் சற்று சுரம் இருந்ததாகவும், அடுத்த நாள் தும்மல் ஆரம்பித்து விட்டதாகவும் கூறினாள். உடனே தும்மல் ஆரம்பித்து 10 நிமிஷம் இடைவிடாமல் தும்மி, பிறகு மூர்ச்சித்து விட்டாள். இம்மாதிரியாக அடிக்கடி நிகழ்ந்து வந்தது. நான் அல்லியம் சிபா 30 வீரியத்தில் 5 வேளை கொடுத்து, மணிக்கு ஒருதரம் கொடுக்கும்படி சொல்லிவிட்டு

வந்தேன். இதில் குணம் தெரியவில்லை என்று உள்ளூர் லோகல்பண்டு ஆஸ்பத்திரியிலுள்ள L. M. P. டாக்டரை அழைத்துவந்து காண்பித்தனர். அவர் "இது புது வியாதியாக இருக்கிறது, நான் கவனித்து வந்து சொல்லுகிறேன்" என்று சொல்லி விட்டாராம். ஷை நோயாளியின் பந்துக்களில் ஒருவரான L. M. P.-க்கு செய்தி அனுப்பினர்.

இதற்கிடையில் சில வைத்தியர்கள் சிகிச்சை செய்தனர். யாதொரு பலனும் ஏற்படவில்லை. ஒரு இரவும் ஒரு பகலும் கழிந்தது, பந்துவான L. M. P. வந்து சேர்ந்தார். அவர், "ஏற்கனவே சிகிச்சை செய்யப்பட்ட சென்னைக்குப் போவது தான் நல்லது. ஆதலால் இனி கால தாமதம் செய்யக்கூடாது, காலை 4½-மணிக்கு புறப்படவேண்டும்" என்று முடிவு கட்டினார். என் மனம் ஒரு நிலையிலில்லை—டாக்டர் V. R. மூர்த்தி அவர்களின் மெட்டீரியா மெடிகாவையும், மற்றும் சில ஆங்கில ஹோமியோ நூல்களையும் ஆராய்ச்சி செய்ததின் பலனாக ஸ்படில்லாவைக் கண்டேன். அப்பொழுது இரவு மணி 9 இருக்கும். நோயாளியைப் போய்பார்த்தேன், அதே நிலையில் மிகவும் பலவீனப்பட்டிருந்தாள். நோயாளியின் கணவர், தந்தை, பந்துவான டாக்டர் முதலியவர்கள், 'காலை 4½ மணிக்கு மதராசுக்குப் போகத் திட்டமிட்டிருப்பதாகவும், அதற்குள் முடிந்த வரையில் பார்க்கும்படி'யும் சொன்னார்கள். நான் ஸ்படில்லா 200-ல் ஒரு இஞ்செக்ஷன் செய்து, ஷை மாத்திரையில் சில வேளைக்கு மடித்து கொடுத்து, 15 நிமிடத்திற்கொரு தரம் கொடுக்கும்படி சொல்லிவிட்டு வந்தேன்.

இரவு சுமார் 12-மணிக்கு எனக்கு ஆள் வந்தது. விசாரித்ததில், கால் பாகம் குணம் ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிவித்தார். மீண்டும் அதே மருந்தில் அரைமணிக் கொருதரம் கொடுக்கும்படியாக 6 வேளை மருந்து அனுப்பினேன். மறுநாள் காலையில் போய் பார்த்தேன். சென்னைக்குப் போகும் பயணம் நிறுத்தப்பட்டு விட்டதாயும் என் மருந்தில் முக்கால் பாகம் வியாதி படிந்து விட்டதாகவும் ஷை டாக்டர் என்னிடம் தெரிவித்தார். அத்துடன் அல்லாமல், நான் கொடுத்தது என்ன இஞ்செக்ஷன் என்றும், பிரயோகம் செய்தது என்ன மாத்திரை என்றும்



கேட்டார். உடனே நான் ஆங்கிலத்தில் (I suspected Paralysis of the involuntory muscles) இயங்காத் தசையின் பார்சவாய்வு என்றும், ஸபடில்லா இஞ்செக்ஷனும், அதே மருந்தும் கொடுத்தேன் என்றும் பளிச்சென்று பதிலளித்தேன். இதையெல்லாம் நீங்கள் எங்கு கற்றீர்கள் என்று கேட்டார். எங்கள் ஆசிரியர் V. R. மூர்த்தி அவர்களின் மெட்டீரியா மெடிகாவில் விபரமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றேன். ஷை டாக்டர் ஹோமியோபதியின் மகிமையை அன்று கண்கூடாகக் கண்டு வியந்தார். பின்னர் 2 தினங்களில் 3 வேளை வீதம் மருந்தை கொடுத்தேன். நோயாளி பூர்ண சௌக்கியத்துடன் இருக்கிறாள் என்பதை நேயர்களுக்கு தெரியப்படுத்துகிறேன். ரூபாய் 3000 செலவில் சிகிச்சை பெறப்பட்ட நோய் இன்று மூன்றணா செலவில் பூர்ண குணம் ஏற்பட்டதைக்கண்டு வியக்காதவர்கள் யார்தான் இருக்க முடியும்? என்னே ஹோமியோபதியின் மகிமை.

சபாஷ் ஸபடில்லா! வாழ்க ஹோமியோபதி.

148810

எல்லா ஹோமியோ—பயோ ஔஷதங்களும் எல்லா வீரியங்களிலும் எமது சென்னை காரியாலயத்தில் நேரில் வாங்கலாம்

சென்னை விலாசம் :

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்
289, சைனுபஜார் ரோடு
சென்னை 1.

தபால் மூலம் பெற விரும்புபவர்கள் நமது கும்பகோணம் ஆபீஸிற்கு எழுதவும்.

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்
ஹோமியோ ஹவுஸ் :: கும்பகோணம்

# ஏழைகளின் தோழன் ஹோமியோபதி

By டாக்டர் R. சந்திரபாலசுப்பிரமணியம் M. I. H. கீழவிடயல்.

"ஐயா......"

"ஐயா......"

"யாரது?"

"ஏன்? நான்தானுங்களே!"

"என்ன வேணும்?"

"ஏதோ புது வைத்தியம் செய்யிரீங்களாமில்லே?"

"ஆமா! அதற்கென்ன?"

"எனக்கு ரொம்ப நாளா வாய்வு உபத்திரவம் கடுமையா யிருக்கு. எழுந்து நடக்கக்கூட முடியல்லே. ஏதாச்சும் வைத்தியம் பண்ணிக்கிடலாமுண்ணு வந்தேனுங்க"

"சரி, நான் நாலு வேளைக்கு மருந்து தரேன். சாப்பிடு சரியாய் போய்விடும்."

"அப்படி சரியாய் போய்டர வியாதிங்களா இது? நான் படர கஷ்டம்.......! கவனிச்சு நல்ல மருந்தாக் கொடுங்க. நாலு வேலைன்னு சொல்லாதிங்க! நல்லா தேவளையாகனும்"

"இந்த மருந்தை சாப்பிட்டுப் பாரு! அப்புரம் சொல்லுவே"

"அப்படித்தானுங்க அந்த டாக்டரையாக் கூட. சொன்னுங்க. கொஞ்சங்கூட குறையில்லே! சேப்புத் தண்ணியையும் பச்சத் தண்ணியும் குடிச்சுப்பிட்டு நூத்துக் கணக்கிலே ரூபாயைத் தொலைச்சதுதான் மிச்சம்!"

"இந்தாப்பா, அதெல்லாம் இங்கே சொல்லாதே. இந்தா மருந்து. இதுக்கு கிரயம் 4 அணாத்தான். எடுத்துக்கிட்டு போ. சாப்பிட்டுவிட்டுப் பின்னால் பதில் சொல்லு, போ"



வந்தவன் கீழே காசை வைத்துவிட்டு மருந்தை எடுத்துக் கொண்டு போனான். "போகிற போக்கிலே "என்னமோ போங்க. நூத்துக் கணக்கிலே மருந்து சாப்பிட்டு ஒரு பலனும் காணும்! இந்தக் காலரை மருந்து சாப்பிட்டுத்தான் குணமாகப் போவுதாம்!! என்னமோ சொல்றீங்களேன்னுதான் நானும் வந்தேன்" என்று முனகிக்கொண்டே போனான் அந்த கிராமவாசி.

வைத்தியம் என்றால் ஆடம்பரம் வேண்டும்! இதுதான் ஜனங்கள் எதிர்பார்ப்பது. தீராத வயிற்றுவலி இரண்டணா மருந்தில் குணமாகிவிட்டதென்றால் மருந்தின் பெயர் பரவுவதற்குப் பதிலாக "மருந்து மகா மட்டம் ஸார், ஏதோ தெய்வச்செயல் குணமாகி விட்டது என்ற நிலை ஏற்படுகிறது தெய்வச்செயலில் மருந்து கிடைத்ததாகக்கொள்ளுதல் தகாதோ? அதுதான் அரிது. இதேபோல் மற்றோரினம். "இரண்டணா மருந்துதானே சாப்பிட்டோம். பூரண குணம் ஏற்பட்டிருக்க முடியாது" என்ற சந்தேகம் வேறு.

வியாதியால் வாடுகிறவர்கள் கண்ட துறைகளில் அதிகம் செலவு செய்து குணம் கிடைக்காவிட்டாலும் பணச்செலவு இருக்கிறதே அது அவர்கள் குணமடைந்ததாகக் காட்டுகிறது. டாக்டர் எவ்வளவுக்கெவ்வளவு பணம் அதிகம் கேட்கிறாரோ, பேட்டி காணுதற்கே இயலாத முறையிலும் மிக்க ஆடம்பரமாகவும் எந்த டாக்டர் இருக்கிறாரோ அவ்வளவுக்கவ்வளவு நம்பிக்கையை மக்களிடம் அந்த டாக்டர் பெறுகிறார். மக்களின் நம்பிக்கை, வியாதியாளருக்குக் குணமாகத் தெரிகிறதேயன்றி உண்மையில் குணங்களேற்படுவதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு எளிமையாகவும் வியாதியஸ்தரின் தாசனாகவும் எந்த வைத்தியன் இருக்கிறானோ அவனிடம் மக்கள் நம்பிக்கை வைப்பதுமில்லை. அவனால் ஏற்படும் குணங்கள் குணங்களாகக் கருதப்படுவதுமில்லை. இந்த நிலையில்தான் நாட்டில் மக்கள் வைத்தியத்தை வளர்த்துவந்தார்கள்.

இதற்குக் காரணம் குறைந்த செலவில் பரிகாரங்கள் செய்யக்கூடிய வைத்திய ஸ்தாபனங்கள் அதிகமில்லாக் குறையேயாகும். கையினால் கிள்ளுவதை கோடரியினால் வெட்டுதல் எத்தகையதோ அத்தகையதுதான் குறைந்த

செலவில் பரிகாரம் செய்தற்குப் பதிலாக அதிக செலவில் பரிகாரம் செய்தல். ஆகவே, இக்குறையைப் போக்க "ஹோமியோபதி" என்ற சூரியன் உதித்து மேல்நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அது இன்னும் சில காலத்தில் உச்சி எல்லையை எட்டிவிடும். சூரியனை மறைக்கும் மழை மேகங்கள் போல ஹோமியோபதிக்கு ஆதியிலிருந்து பல இடையூறுகள் இருந்தனவெனினும் இடையிடையே ஆதவன் நானிருக்கிறேன் என முகங்காட்டுதல் போல ஹோமியோபதி ஏழைகளுக்கு ஆதரவு கொடுத்துத்தான் வருகிறது. இவ்விளஞ்சூரியன் பூரண பொலிவுடன் விளங்கும் நாள் அண்மையில்தான் இருக்கிறது. விலையற்றுக் கிடைக்கும் பறந்த வெளிக்காற்றிற்கும், காசு கொடுத்துப் பெறும் மின்சார விசிறியின் காற்றிற்கும் உள்ள வேறுபாடேதான் அதிகச் செலவு செய்தும் காலம் கடந்தும் குணம் தரும் பிற வைத்தியங்களுக்கும், குறைந்த செலவில் குறுகிய நாளில் குணங்கிடைக்கும் ஹோமியோபதிக்கும் ஆகும். வாழட்டும் நமது ஹோமியோபதி—வளரட்டும் ஏழையின் தோழனாக.


**நீங்கள் வாங்கி விட்டீர்களா ?**

**ஹோமியோபதி**

**சிகிச்சைக் களஞ்சியம்**

முதற் பாகம் — உறுப்பியல்.

சுமார் எண்பது தலைப்புக்களில் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அவயவத்தையும் எடுத்து அவைகளில் வேலை செய்யும் ஒவ்வொரு ஔஷதத்தின் முக்கியக் குறிகள் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஹோமியோ டாக்டருக்கும் இன்றியமையாத ஒரு நூல்.

விலை ரூ. 10/- அனுப்பும் சிலவு ரூ. 1—8—0.

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்,
ஹோமியோ ஹவுஸ், :: கும்பகோணம்.




# நேயர்களின் கடிதங்கள்

ஸ்ரீ V. K. சுவாமியப்பன், வடக்குப் புதுப்பாளையம்.

நவம்பர் மாத ஹோமியோபதி இதழ் கிடைக்கப் பெற்றேன். மிகவும் சிலாக்கியமான விஷயங்கள் உள்ளன. எப்பொழுதும் உள்ள இதழ்களைவிட மிகவும் பொலிவுடனும், கவர்ச்சிகரமான விஷயங்கள் உள்ளது பற்றி மிகவும் மகிழ்ச்சி. திரு. பார்க்கர் அவர்களின் நூல்களிலிருந்து கட்டுரைகள் இவ்விதழ் முதல் தொடங்கி தொடர்ந்து வெளிவர இருப்பது தமிழ் நாட்டு ஹோமியோபதியர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான விஷயம். இவ்விஷயமாய் நம் மாத வெளியீடு மூலம் தமிழ்ப்படுத்தி அவ்வப்போது வெளியிடுவதைவிட முழுப் புத்தகமாக கூடிய சீக்கிரம் வெளியிட்டால் மிகவும் நல்லது என நினைக்கிறேன். ஏனெனில் இவைபோன்ற விஷயங்களை முப்பது நாட்களுக்கு ஒரு முறை பத்துப்பக்கங்களைப் படித்தால், நல்ல சுவையுள்ள ஒரு தின்பண்டத்தை குழந்தையிடம் கொடுத்து சாப்பிடச் சொல்லி வாயில் சுவைக்கவைத்து அதன் சுவையை அறிந்த மாத்திரத்தில் அதனிடமிருந்து காக்கைப் பிடுங்கிச் செல்வது போலும், பிறகு மறுபடியும் மறுபடியும் கொடுத்துப் பிடுங்கிச் செல்வது போல் மாதா மாதம் பத்துப் பக்கங்கள் படித்தவுடன் முடித்து மீதியை அடுத்த மாதம் படிப்பதால் மேற்காட்டிய உதாரணத்திற்கே பொருந்துகிறது.

அடுத்த வருஷ ஹோமியோபதி சஞ்சிகைக்கு இன்னும் இரண்டு ரூபாய் சந்தாவைக் கூடுதலாக்கி சுமார் 40 பக்கங்கள் வரை நல்ல கட்டுரைகளுடன் வெளியிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. S. திருஞானம், M. I. H. உதயங்குடி.

தங்கள் நவம்பர் மாத இதழிலிருந்து அழகிய கவர்ச்சி தரும் சித்திரங்கள் வெளியிட ஆரம்பித்திருப்பது கண்ணுக்கும் கருத்துக்கும் ஓர் இனிய விருந்தாகிறது. அதோடல்லாமல் இதழ் மிக்க அலங்காரமாகவும், கவர்ச்சியாகவும் இருக்கின்றது

ஆகையால் தாங்கள் இம்முயற்சியில் சிறிதேனும் உற்சாகங் குறையாமல் இப்பணியை நீடித்து செய்துவர எல்லாம் வல்ல இறைவன் தங்களுக்கு நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வமும் அளித்து அருள் புரிவாராக.

குறிப்பு: ஹோமியோபதி சஞ்சிகையில் இவ்வளவுகாலம் இருந்ததை விட தற்சமயம் பல அறிய விஷயங்கள் வெளியிட ஆசிரியர் அவர்கள் முன்வந்திருப்பதால் ஹோமியோபதியர்கள் யாவரும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து, தேடிச்சென்றாலும் கிடைக்காத அரும் பெரும் விஷயங்களைக் கற்று, தொழிலில் தீவிரவாதிகளாய் இருந்து மக்களுக்கு நம்பணியை ஆற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சுரண்டை, திரு. S. R. P. துரைபாண்டியன், திருமதி. S. S. நாச்சியார்.

இதயகமலம்போன்று இன்சொலாலாய கருத்தொழுமித்தக் கட்டுரைகள் நிறைந்த நம் "ஹோமியோபதி" இதழ்கள் உள்ளக் கிடையின் பாவத்தை முகம் காட்டுவதே போன்று உருவாக்கப் பட்ட அட்டைப்படம் அழகுபெற்று இலங்குவது நேயர்களின் நீங்கா விருப்பை நிலைநாட்டுமென்பதில் சற்றும் ஐயமில்லை, வரவேற்கிறோம்.

அரிய சில ஆங்கிலக் கட்டுரைகளை தமிழ் மொழியிலாக்கி தமிழ் அன்பர்கட்கும், தமிழுக்கும் மாவிருந்தாக்கிய ஆற்றல் மிக்க அருந்தொண்டினை யாவரும் வேண்டற்பாலது.


ஹோமியோபதி படித்துப் பட்டம் பெற்ற (Lady Doctor) ஒரு பெண் டாக்டர் ஒரு ஹோமியோபதி டாக்டரிடம் அஸிஸ்டெண்டாக வேலைசெய்யத் தேவை.
விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்:

**Dr. R. GOPALAN (Hom & Bio)**
**HOMEO CLINIC**
West Madavilagam
**VEDARANIAM (Tanjore Dt.)**




# செய்தி

அகில தமிழ் நாட்டு ஹோமியோபதி வைத்திய சங்கத்தின் நான்காவது ஆண்டுவிழாவும், ஜெனரல்பாடிக் கூட்டமும் சென்ற டிசம்பர் மாதம் 27-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருச்சி சங்கக் காரியாலயத்தில் இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட் டைரெக்டர் Dr. V. R. மூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல ஹோமியோபதியர்கள் விழாவில் கலந்து கொண்டனர்

தலைவர் தமது உரையில் தற்சமயம் ஹோமியோபதியரிடையே இருக்க வேண்டிய ஒற்றுமையை வலியுறுத்தினார். வரும் ஏப்ரல் மாதத்தில் மகான் ஹானிமென் பிறந்ததின விழா சமயத்தில் குடந்தையில் ஒரு மாபெரும் மகாநாடு கூட்டலாம் என்றும், அதை நமது மாகாண சுகாதார மந்திரியைக் கொண்டு திறந்து வைக்கச் செய்யலாம் என்றும் யோசனைகள் கூறினர்.

குழுமணி டாக்டர் K. K. முத்து ஆண்டு அறிக்கையைப் படித்தார். வித்வான் M. M. சுப்பையா "இயற்கையும்—எழிலும்" என்பது பற்றியும். டாக்டர் V. மகாதேவன் "ஹோமியோபதிக்கு அங்கீகாரம்" என்பது பற்றியும். பேசினார்கள். டாக்டர் K. M. A. வஹாப் வர இயலாமற் போனதால் அவரது சொற்பொழிவை டாக்டர் G. L. பிரகாசம் படித்தார். டாக்டர் (Miss) N. பத்மாவதி, ஸ்ரீமான் S. கந்தசாமி முதலியவர்களும் பேசினார்கள்.

தேனீர் விருந்திற்குப் பின் சங்க நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்று டாக்டர் தோட்டா R. ராமசாமி செட்டியார் தலைவராகவும், டாக்டர் G. சீதாராம் நாயுடு. டாக்டர் P. S. P. நாயுடு முதலியவர்கள் உபதலைவர்களாகவும், டாக்டர் G. L. பிரகாசம் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

சங்கத்தின் சார்பில் திருக்கழுகுன்றம் டாக்டர் K. M. A. வஹாப் அவர்களுக்கு "எல்லிஸ் பார்க்கர்" எழுதிய 'My Testament of Healing' என்னும் நூல் பரிசளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு மேற்படி நூல் ஜனாப் S. R. பாஷா என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் டாக்டர் G. சீதாராம் நாயுடு தற்சமயம் பத்திரிகைகள் வெளியிடுவதிலுள்ள சிரமங்களைக் குறிப்பிட்டு, சங்கப் பத்திரிகையான "ஹோமியோபதியின் குரல்" விருத்தியடைய அனைவரும் சந்தாதாரராகச் சேர வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறினார். டாக்டர் M. P. முத்துராமய்யர் சங்கத்தைத் திறம்பட நடத்தி வரும் பிரமுகர்களைப் பாராட்டினார்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

(1) நமது மாகாண சர்க்கார் ஹோமியோபதி முறையை இதர வைத்திய முறைகளைப் போலவே கருதி, தக்க 'அந்தஸ்தும், ஆதரவும் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

(2) குறுகிய காலப் பயிற்சி ஒன்றை வைத்திய முறையில் ஆரம்பிப்ப தானல் ஹோமியோபதிக்கு ஆதரவு தந்து இம்முறையில் மேற்படி பயிற்சியை ஆரம்பிக்கும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

டாக்டர் N. கோவிந்தராஜனும், டாக்டர் பாலசுப்ரமண்யமும் வந்திருந்த அனைவருக்கும் நன்றி கூறினர்கள். டாக்டர் V. மருதை நாட்டு வணக்கம் பாட கூட்டம் முடிவுற்றது.

* * * *


தஞ்சை ஜில்லா அணைக்கரை டாக்டர் A. சுப்ரமண்யம் M. I. H. அவர்களின் 'ஹோமியோபதி வைத்தியசாலை'யை டாக்டர் M. S. கனகசபை M. I. H. 9—12—53 புதன்கிழமை அன்று திறந்து வைத்தாராம்.

திருப்பூர் சாப்பக்காடு மெயின்ரோடில் கடந்த பத்து வருடங்களாக நடைபெற்றுவந்த தமது ஆஸ்பத்திரியை 1—11—53 முதல் ஷையூர் தெற்கு முதல் வீதி இரண்டாம் நெம்பர் கட்டிடத்திற்கு மாற்றியிருப்பதாக Dr. A. V. வெங்கடாசலம் F. T. H. C. அறிவிக்கிறர்.

1954 ஜனவரி முதல் தேதியன்று மதுரை ஜில்லா ஒடைப்பட்டியில் ஸ்ரீ ஆர். சவரிமுத்து M. I. H. அவர்களின் 'ஹோமியோ கிளினிக்'கை Dr. U. பாக்கியநாதன் திறந்து வைத்திருக்கிறாராம்.

செங்கற்பட்டு ஜில்லா ஹோமியோபதி டாக்டர்கள் சங்கத்தில் இதுவரை அங்கத்தினராக சேர்ந்துகொள்ளாத ஷை ஜில்லா ஹோமியோபதியர்களை உடனே அங்கத்தினராகப் பதிவு செய்துகொள்ளும்படி ஷை சங்கக் காரியதரிசி Dr. S. சுப்ரமண்யம் (ஹோமியோ) கேட்டுக்கொள்கிறர். விபரங்களுக்கு காரியதரிசி, செங்கற்பட்டு ஜில்லா ஹோமியோபதியர் சங்கம், கீழவீதி, கருங்குழி B. O. செங்கற்பட்டு ஜில்லா என்ற விலாசத்திற்கு எழுதவும்.





அகில தமிழ் நாட்டு ஹோமியோபதி வைத்திய சங்கத்தின் நான்காவது ஆண்டு விழாவும், ஜெனரல்பாடிக் கூட்டமும் 27-12-53 அன்று திருச்சியில் இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட் டைரெக்டர் Dr. V. R. முர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# ஹோமியோபதியின் வேதாந்தம்

(Dr. Hahnemann's Organon of Medicine)

(முன் தொடர்ச்சி)

## ஸ்லோகம் 244

சதுப்பு நில ஜில்லாக்களிலும் அடிக்கடி வெள்ளங்கள் யேற்படுவதற்குரிய நாடுகளிலும் அந்நிலப்பரப்பிற்குரிய முறை சுரங்களை குணமாக்க அல்லோபதி வைத்தியர்களுக்கு சிரமமாயிருக்கிறது. ஆனால் வியாதியால் பிடிக்கப்படாத ஒரு யௌவன மனிதன் ஆரோக்கிய உணவை புசித்தும் அவன் தேகம் யாதொன்றின் குறைவால் தாழ்த்தப்படாமலும் இருந்தால் அச்சதுப்பு நில ஜில்லாக்களும் அவனுக்கு வசிக்க ஒத்துக் கொண்டு விடுவதுடன் வியாதியால் பிடிக்காமலும் இருக்கிறான். இச்சதுப்பு நிலத்திற்குரிய முறை சுரமும் புதிதாய் அங்கு சென்றவனைத்தான் தாக்குகிறது. ஆனால் மிக உயர்ந்த வீரியப் படுத்திய ஸிங்கோனாப் பட்டை திராவகத்தில் ஒன்று அல்லது இரண்டு துளி மருந்து மேற்காட்டியபடி கட்டுப்பாட்டுடன் உசித ஆகார நியமங்களுடன் வசித்து வருவதால் சீக்கிரமாக வியாதியிலிருந்து அவனைக் காப்பாற்றுகிறது. ஆனால் மிதமான தேகப்பயிற்சி எடுத்துக் கொண்டும், தொழில் புரிந்தும் சரீரத்துக்கொத்த உசித ஆகாரம் உட்கொண்டும் வரும் மனிதர்களுக்கும் அப்படிப்பட்ட ஸிங்கோனா ஒன்று அல்லது இரண்டு சிறு சொட்டு மருந்தால் சதுப்பு நிலத்திற்குரிய முறை சுரத்தை சொஸ்தமாக்கவும் முடியாது. ஏனென்றால் ஸோரா தோற்ற மளிக்க முயற்சியுள்ள அம்மனிதர்களில் அது அவர்களின் வியாதியின் அஸ்திவாரத்தில் எப்பொழுதும் தங்கி நிற்கிறது. ஸோராவை எதிர்த்து அடக்க சிகிச்சை செய்யாது அவர்களின் முறை சுரத்தை அச்சதுப்பு நில ஜில்லாவிலேயே சொஸ்தஞ் செய்ய முடியாது. இவ்வியாதியஸ்தர்கள் உடனே சதுப்பு நில ஜில்லாவை விட்டகன்று வரண்ட, மலைப்பாங்காயுள்ள இடங்களுக்கு குடிப்புகுந்தால், வியாதியால் வெகு நாள் ஆழ்ந்து தாக்கப்பட்டிராவிட்டால், அதாவது, அவர்களில் ஸோரா



முழுமையும் விருத்தியடைந்து வெளித்தோன்றாதிருப்பினும், அது தன்னுடைய மறைந்திருக்கும் தன்மையிலேயே திரும்பி விடினும் குணமடைகிறார்கள்; ஸோராவை எதிர்க்கும் சிகிச்சை செய்து கொள்ளாமல் முற்றும் சௌக்கியமடைய மாட்டார்கள்.

## ஸ்லோகம் 245

ஹோமியோபதி சிகிச்சையில் வியாதிகளின் முக்கியமான வகைகளுக்கும் அவைகளுக்கு ஏற்படும் தன்மைகளுக்கும் என்ன கவனம் செலுத்த வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டோம். மருந்துகளைப் பற்றியும் அவைகளை உபயோகிக்கும் வழிகளைப் பற்றியும், மற்றும் இம்மருந்துகளை, உபயோகிக்கும்போது அனுசரிக்க வேண்டிய பத்தியக் கட்டுப்பாடுகளைப்பற்றியும் சொல்லத் தொடங்குவோம்.

## ஸ்லோகம் 246

சிகிச்சை செய்யும் ஒவ்வொரு சமயத்திலும் உறுதியாய் விருத்தியடைந்து வரும் குணம் நீடித்திருக்கும் வரை ஒரு மருந்தையும் திரும்பவும் கொடுக்கக் கூடாது; ஏனென்றால் சாப்பிட்ட மருந்து தொடர்ந்து வேலை செய்து நன்மை செய்ய ஆரம்பித்து அதை முற்றும் நிறைவேற்ற விரைந்துகொண்டிருக்கிறது. குறுகிய கால (acute) வியாதிகளில் இத்தன்மை இயல்பானதே, ஆனால் அனேக நீடித்த (chronic) வியாதிகளிலோ வென்றால் தேர்ந்தெடுத்த சரியான ஒரே வேளை ஹோமியோபதி மருந்து தொடர்ந்து தாமதமாய் வேலை செய்யினும் சில சமயங்களில் அப்படியுள்ள கேஸில் அம்மருந்தால் 40, 50, 60, 100 நாள்களில் பூரண. அனுகூலம் ஏற்படும்படி சாதாரணமாக ஒத்தாசை செய்யலாம். ஆனாலும் இத்தன்மை அரியதாயிருக்கிறது. இதுவுமன்றி, கூடியவரையில் வைத்தியனுக்கும் நோயாளிக்குங்கூட மிகவும் துரிதத்தில் 'குணங்கிட்டுமளவுக்கு இந்த கால எல்லையை அரை, கால், இன்னும் குறைந்த அளவிற்குச் சுருக்குதல் ஒரு முக்கியமான விஷயம். சமீப காலத்தில் அடிக்கடி அனுபவத்தாலறிந்ததில் இக்கால எல்லையை கீழ்கண்ட நிலைமைகளில் இன்பமாகவே குறைக்கலாம் எனக்

கண்டேன். முதலாவதாக, மிகுந்த ஜாக்கிரதையுடன் பொருக்கியெடுத்த மருந்து முற்றும் ஹோமியோபதி முறைப்படி இருத்தல்; இரண்டாவதாக, அது உயர்ந்து வீரியப்படுத்தப்பட்டு, தண்ணீரில் கரைத்து தகுந்த சிறிய அளவில் குறித்த இடைவேளைகளில் ஒரு வேளை மருந்து கொடுப்பது குணமாக்குவதை விரைவில் செய்து முடிக்க மிகவும் தகுந்ததென அனுபவம் தெரிவித்திருக்கிறது. ஆனால் ஜீவ சக்தியை பொருந்தாத வகையில் எதிர்த்தாக்குதலைச் செய்யாமலும், முக்கியமாய் மருந்தின் வீரியத்தை மாற்றுமல் அடிக்கடியும் கொடுக்கப்படும் கேஸ்களில உண்டாகும் குழப்புதலை போல் எழுப்பாமலும், வியாதியையொத்த குறிகளை ஏற்படச் செய்யும்படி, ஒவ்வொரு மருந்தின்பாகமும், முதலில் கொடுத்ததை அடுத்துத் தொடர்ந்து கொடுக்கப்படுவது சற்றேறக் குறைய வீரிய மருந்துகளின் அளவு குறைந்திருக்கும்படி முன்னெச்சரிக்கையாயிருத்தல் வேண்டும்.

600 003.
148810

## பிழைத் திருத்தம்

சென்ற மாத சஞ்சிகையில் ஜே. எல்லிஸ் பார்க்கர் கட்டுரை மொழி பெயர்ப்பின்; முதல் பாராவில் "அவர் (டாக்டர் ஜார்ஜ் ராயல்) இதைப்பற்றி **1730** ஏப்ரல் ஹோமியோபதி ரெகார்டர் என்னும் சஞ்சிகையில் எழுதியிருக்கிறார்" என்று வெளியாகியிருப்பதை "1930 ஏப்ரல்" என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும். இந்தத் தவறுக்கு வருந்துகிறோம்.

(ஆ. ஹோ.)

Edited, Printed & Published by Dr. V. R. MURTY, at the Homoeopathy Press
Homeo House, Kumbakonam

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |